# ஒன்-ஸ்டாப் லங் கேன்சர் கிளினிக்

# நோயாளிக்கான தகவல் பிரசுரம்

ஒன்-ஸ்டாப் லங் கேன்சர் கிளினிக், உங்களைக் கவனிப்பதில் ஈடுபட்டுள்ள மருத்துவர்கள் மற்றும் செவிலியர்களுடன் சேர்ந்து, உங்களுக்கு எந்த வகையான சிகிச்சை மிகவும் பொருத்தமானது என்பதை பரிசீலனை செய்வதற்கு கூடவே உங்களுக்கும் உங்களுக்கு நெருக்கமானவர்களுக்கும் வாய்ப்பை வழங்குகிறது.

உங்கள் சிகிச்சை பற்றிய தீர்மானம்

பெரும்பாலும், நுரையீரல் புற்றுநோயால் பாதிக்கப்படும் ஒரு நபருக்கு பல்வேறு வழிகளில் அதற்கு சிகிச்சையளிக்கலாம்.

உதாரணமாக, நுரையீரல் புற்றுநோய்க்கு சில நேரங்களில் பின்வரும் சிகிச்சைகளை மேற்கொள்ளலாம்:

- புற்றுநோயை அகற்ற அறுவை சிகிச்சை, அல்லது;
- புற்றுநோயை அழிக்க நுரையீரலுக்குள் செலுத்தப்படும் கதிரியக்க கதிர்களைப் பயன்படுத்தும் கதிர்வீச்சு சிகிச்சை

ஒரு சிகிச்சையானது மற்றொரு சிகிச்சையை விட முக்கியத்துவம் வாய்ந்த சிறப்பாக இல்லை என்பது போன்ற நிகழ்வுகளும்கூட அடிக்கடி ஏற்படுகிறது. எனவே, வெவ்வேறு சிகிச்சைகள் மற்றும் ஒவ்வொரு சிகிச்சையின் வெவ்வேறு நன்மைகள் மற்றும் தீமைகள் ஆகியவற்றைப் புரிந்துகொள்ள உங்கள் மருத்துவக் குழு உங்களுக்கு உதவுவது முக்கியமாகும்.

**நுரையீரல் புற்றுநோய் ஆரம்பத்திலேயே கண்டறியப் பட்டால், அப்போது அறுவை சிகிச்சை மற்றும் கதிரியக்க சிகிச்சை இரண்டும் மிக அதிக வெற்றி விகிதங்களைக் கொண்ட மிகவும் திறனுள்ள சிகிச்சைகள் என்பது ஒரு மிகவும் முக்கியம் வாய்ந்த தகவலாகும்.**

கிளினிக்கின் நோக்கம்

கிளினிக்கில் நீங்கள் எங்களுடன் இருக்கும் நேரத்தில், உங்கள் சிகிச்சைக்கு உள்ள விருப்பத்க தேர்வுகளைப் பற்றிய தெளிவான மற்றும் எளிதில் புரிந்துகொள்ளக்கூடிய தகவலை உங்களுக்கு வழங்க விரும்புகிறோம், இதன் மூலம் எந்த சிகிச்சை உங்களுக்கு மிகவும் பொருத்தமானது என்பதை நாம் ஒன்றாகத் தீர்மானிக்க முடியும்.

நீங்கள் எந்த சிகிச்சையை மேற்கொள்ளலாம் அல்லது செய்யக்கூடாது என்பதை கூறுவது எங்கள் பணியல்ல, மாறாக உங்களுக்கான சரியான முடிவை எடுப்பதற்கு உங்களுக்கு ஆதரவளிப்பதுதான் எங்களுடைய பணி. இதற்கு உங்களுக்கு உதவ,

விவாதிக்க நிறைய தகவல்கள் இருக்கலாம். மேலும் நீங்கள் பல்வேறு மருத்துவர்களையும் செவிலியர்களையும் சந்திக்கலாம்.

நீங்கள் ஏற்கனவே செய்துள்ள பல்வேறு பரிசோதனைகளின் முடிவுகள், உங்கள் கிளினிக் வருகை நாளில் முடிக்கப்பட வேண்டிய மேலும் சில பரிசோதனைகள், எங்கள் குழுவால் மதிப்பாய்வு செய்யப்பட்டு உங்களுடன் விவாதிக்கப்படும்.

**அன்றைய தினம் ஆதரவுக்கு உங்களுடன் குடும்ப உறுப்பினர் அல்லது நண்பரை அழைத்து வரவும், கூடுதலாக ஒருவர் அதனைக் கேட்பது எப்போதும் உதவியாக இருக்கும்!**

<u>எங்கள் குழு</u>

அன்றைய நாளில் எங்கள் குழுவில் உள்ள கீழ்க்கண்ட சில உறுப்பினர்களை நீங்கள் சந்திக்கலாம்:

- **நெஞ்சறை அறுவை சிகிச்சை நிபுணர்:** நுரையீரலில் இருந்து புற்றுநோய்களை அகற்ற அறுவை சிகிச்சை செய்யும் ஒரு நிபுணர்
- **மருத்துவ புற்றுநோயியல் நிபுணர்:** கதிரியக்க சிகிச்சை மூலம் நுரையீரல் புற்றுநோய்க்கு சிகிச்சையளிக்கும் நிபுணர்
- **உணர்விழப்பு மருந்து நிபுணர்:** அறுவை சிகிச்சை நடைபெறுவதற்கு முன், நடைபெறும்போது மற்றும் அதற்குப் பின் நோயாளிகளைக் கவனிப்பதில் நிபுணர்
- **நுரையீரல் புற்றுநோய் மருத்துவர்:** நுரையீரல் புற்றுநோய் கண்டறிதல் மற்றும் சிகிச்சையின் அனைத்து அம்சங்களிலும் நிபுணர்
- **நெஞ்சறை அல்லது மேக்மில்லன் செவிலியர்:** புற்றுநோயால் பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்கு ஆதரவளிக்கும் சிறப்பு செவிலியர்கள்
- **CURE குழு:** புகைபிடிக்கும் நோயாளிகள் அதை நிறுத்த உதவும் நிபுணர்களின் குழு
- **Prehab4cancer குழு:** நோயாளிகள் புற்றுநோய் சிகிச்சைக்கு தயாராவதற்கு உதவும் உடற்பயிற்சி பயிற்சியாளர்கள்
- **புற்றுநோயியல் நிபுணர்:** புற்றுநோயால் பாதிக்கப்பட்ட நோயாளிகளின் ஆரோக்கியத்தின் அனைத்து அம்சங்களையும் மேம்படுத்துவதற்கு ஆதரவளிக்கும் ஒரு சிறப்பு மருத்துவர்
- **செயின்ட் ஆன்ஸ் ஹாஸ்பிஸில் இருந்து 'பீயிங் யூ' குழு:** உங்களுக்கு ஆதரவளிக்க நல்வாழ்வு பல்வேறு வரிசைகளில் கருவிகளை வழங்கும் குழு

One-Stop Lung Cancer Clinic

NHS in Greater Manchester

## கிளினிக்கில் என்ன நடக்கிறது

**கிளினிக் தொடங்கும் நேரம்: காலை 8 மணி**

**உங்கள் நாளில் ஆற்றல் கொண்ட நேரம் சுறுசுறுப்பானது என்பதால், சரியாக காலை 8 மணிக்கு வரவும். பல மணிநேரம் (பெரும்பாலும் காலை முழுவதும், சில சமயங்களில் தேவைப்பட்டால் நீண்ட நேரம்) மருத்துவ மனையில் எங்களுடன் இருப்பதை நீங்கள் எதிர்பார்க்கலாம்.**

நீங்கள் வந்தவுடன், நர்சிங் ஊழியர்கள் நீங்கள் வந்தவுடன் உங்களைச் சந்தித்து தேவையான அனைத்து பாக்கியுள்ள பரிசோதனைகள் மற்றும் மதிப்பீடுகளை முடிப்பார்கள். **தயவுசெய்து வசதியான, தளர்வான ஆடைகள் மற்றும் உங்கள் அன்றாட காலணிகளை அணியுங்கள்**.

அடுத்து, உங்கள் உள்ளூர் மருத்துவமனையில் நீங்கள் செய்த பரிசோதனைகள் மற்றும் நீங்கள் முதலில் எங்களது கிளினிக்கிற்கு வந்ததும் செய்த பரிசோதனைகள் குறித்து மதிப்பீடு செய்யவும் விவாதிக்கவும் உங்கள் மருத்துவர்களும் செவிலியர்களும் ஒன்று கூடுவார்கள்.

இதற்கிடையில், நுரையீரல் புற்றுநோய் சிகிச்சைகள் மற்றும் இந்த சிகிச்சைகளுக்கு எவ்வாறு தயாரிப்பு செய்வது என்பது பற்றிய பல தகவல் வீடியோக்களைப் பார்க்கும் வாய்ப்பைப் பெறுவீர்கள். உங்கள் தேவைகளுக்குப் பொருத்தமான, புகைபிடிப்பதை நிறுத்தும் நிபுணர் குழு அல்லது செயிண்ட் ஆன்ஸ் ஹாஸ்பிஸ்-இல் இருந்து குறைநிரப்பு சிகிச்சையாளர் போன்ற எந்த குழுக்களையும் நீங்கள் சந்திப்பீர்கள்.

இறுதியாக, வெவ்வேறு மருத்துவர்களைச் சந்திக்கவும், உங்கள் சிகிச்சை விருப்பங்களைப் பற்றி விவாதிக்கவும், உங்கள் சிகிச்சையைப் பற்றி முடிவெடுப்பதற்கு ஆதரவாக இருப்பதை உணரவும் வாய்ப்பு கிடைக்கும்.

எடுத்துக்கொள்வதற்கு நிறைய தகவல்கள் உள்ளன, மேலும் நாள் முழுவதும் ஏதேனும் கேள்விகளைக் கேட்பதற்கு எங்கள் நிபுணர் உங்களுக்கு ஆதரவளிப்பார்.

## அன்றைய நாளில் என்ன கொண்டு வர வேண்டும் (சரிபார்ப்பு பட்டியல்)

- ஒரு உறவினர் அல்லது நண்பர்
- உங்கள் தற்போதைய மருந்துகள் அனைத்தும் (அனைத்து மாத்திரைகள், மருந்துகள், ஊசி மற்றும் இன்ஹேலர்கள்)
- தேவைப்படக்கூடிய கண்ணாடிகள், காது கேட்கும் கருவிகள்/நடைபயிற்சி துணைக்கருவிகள்
- தனிப்பட்ட தொடர்பு எண்கள் மற்றும் மின்னஞ்சல் முகவரிகள்
- தகவல் மற்றும் கேள்விகளை எழுத ஒரு பேனா மற்றும் காகிதம்

- நாங்கள் தேநீர்/காபி, பிஸ்கட் மற்றும் சாண்ட்விச்களை வழங்குவோம், ஆனால் உங்களுக்கு ஏதேனும் சிறப்பு உணவுத் தேவைகள் இருந்தால், தேவைக்கேற்ப பானங்கள் /சிற்றுண்டிகளைக் கொண்டு வாருங்கள்

**நர்சிங் குழுவின் உறுப்பினர் ஒருவர், ஒரு நாளுக்கு முன் உங்களைத் தொலைபேசியில் தொடர்புகொண்டு, இந்தத் தகவலை மீண்டும் படிக்கும்படி கூறுவார் மேலும் வரவிருக்கும் உங்கள் ஒன்-ஸ்டாப் லங் கேன்சர் கிளினிக் வருகையைப் பற்றி ஏதேனும் கேள்விகளுக்குப் பதிலளிப்பார்.**

<u>கிளினிக்கை எவ்வாறு கண்டுபிடிப்பது</u>

கிளினிக் இங்கு அமைந்துள்ளது:

**The Neil Cliffe Centre, Entrance 12, Wythenshawe Hospital, Southmoor Road, Manchester, M23 9LT**

<u>நான் எங்கே நிறுத்த வேண்டும்?</u>

நீல் கிளிஃப் சென்டர் மகப்பேறு பிரிவுக்கு அருகில் வித்துன்ஷா மருத்துவமனையின் பின்புறத்தில் அமைந்துள்ளது. மகப்பேறு துறைக்கு எதிரே ஃப்ளோட்ஸ் ரோட் வழியாக அணுகக்கூடிய பொது வாகன நிறுத்துமிடம் அங்கே உள்ளது. அங்கிருந்து, மகப்பேறு துறையின் வலதுபுறத்தில் மூலையைச் சுற்றி நடக்கவும், அப்போது நீல் கிளிஃப் சென்டர் நுழைவாயிலைக் காண்பீர்கள்.

வித்துன்ஷா மருத்துவமனை வரைபடம்:



இது கிளினிக் நடைபெறும் நீல் கிளிஃப் மையத்தின் புகைப்படம்:




எங்கள் கிளினிக்கிற்கு வருவதற்கு உங்களுக்கு போக்குவரத்து தேவைப்பட்டால், நாங்கள் உங்களுக்காக அதை ஏற்பாடு செய்வோம். இதைப் பற்றி உங்களுக்கு ஏதேனும் கேள்விகள் இருந்தால், கீழே உள்ள விவரங்களின்படி எங்களைத் தொடர்பு கொள்ளவும்.

| |
|---|
| உங்களுக்கு ஏதேனும் கேள்விகள் இருந்தால் தயவுசெய்து இதன் வாயிலாகத்க தொடர்புகொள்ளுங்கள்:<br>தொலைபேசி:<br>மின்னஞ்சல்: |

உங்களை சந்திப்பதை நாங்கள் ஆவலுடன் எதிர்பார்க்கிறோம்.

***ஒன்-ஸ்டாப் லங் கேன்சர் கிளினிக் குழு***

அன்றைய தினத்தில் அல்லது அதற்கு முன் கிளினிக்கில் உள்ள மருத்துவர்கள் மற்றும் செவிலியர்களிடம் கேட்பதற்கு ஏதேனும் கேள்விகள் இருந்தால் கீழே உள்ள இடத்தைப் பயன்படுத்தி எழுதவும்: